வடக்கன்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்.

119—(*வினா எண். 787)— **திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான இராதாபுரம் தொகுதியிலே அந்த வடக்கன்குளம் பகுதியிலே வறட்சிக்கு எதிரொலியாக ஏழைஎளிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற காரணத்தினாலே நோய்வாய்ப் படுகின்றவர்கள் நாகர்கோயில் அல்லது திருநெல்வேலி செல்ல வேண்டியிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இதற்கான முயற்சிகளை அரசு மேற் கொள்ளும்.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர் களே, வடக்கன்குளம் பகுதியிலே இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. மேற்கூரை இல்லை. தண்ணீர் வசதி அங்கு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. நிலத்தடி நீர் 500 அடிக்குக் கீழே சென்றிருக் கின்ற இந்த நேரத்திலே அந்த சுகாதார மையத்திற்கு தண்ணீர் வசதி வழங்க ஏதாவது ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா? பழுது பார்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் பழுதுபார்ப்பதற்கான பணிகள் இப்போது துவங்கப்பட்டு இருக்கின்றன. ஆங்காங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே இதுவும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த நிதிநிலை தடையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நிதிநிலை தடையாக இருக்கக்கூடிய இந்த நேரத்திலேதான்

அமைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிலே செய்யப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் பூராவும் அந்தப் பகுதி மக்கள பயன்படுத்த முடியாமல்—மருத்துவர்கள் இல்லாததால்—இருக்கிறது. இருக்கின்ற சுகாதார நிலையங்களுக்கு உரிய மருத்துவர்களை நியமித்து அந்த நிலையங்கள் மக்களுக்கு பயன்படக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான பதில்களை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த மானியத்தின் போதும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏறக்குறைய இந்தப் பிரச்சினை குறித்து ஆயிரம் டாக்டர்கள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு ஆணைக்குழு 934 பேர்களுக்கு பணியாட்களை, டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்லி விளம்பரம் செய்துவிட்டு அது சுமார் 1400 மருத்துவர்களை தேர்வு செய்திருக்கிறது. அதை எதிர்த்து ஒருவர் வழக்கு தொடுத்திருக்கிறார். அதன் விளைவாக இப்போது சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட விரைவில் அனைத்துப் பகுதிகளிலும் மருத்துவர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது.

வேட்டவலம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கல்.

120.—(*வினா எண். 1026)—**திரு. கே. பிச்சாண்டி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மான்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டவலத்தைச் சுற்றி சுமார் 35,000 மக்கள் வசிக்கிறார்கள். அரசு மருத்துவமனை சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. சரியான பஸ் வசதி இல்லை. அந்த மக்களின் மருத்துவ வசதியைக் கருதி இனியாகிலும் வரும் நிதியாண்டில் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.